# அக்டோபர் – 11 – வியாழன்

**புனித 23ம் அருளப்பர் - திருத்தந்தை**

**நம் பகைவரிடமிருந்தும் நம்மை வெறுப்போர் அனைவரின் பிடியிலிருந்தும் நம்மை மீட்பார். லூக். 1:71**

## முதல் வாசகம் : கலாத்தியர் 3 : 1 - 5

அறிவிலிகளான காலத்தியரே, உங்களை மயக்கியோர் யார்? இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவராய் உங்கள் கண்முன் படம் பிடித்துக் காட்டப்படவில்லையா?உங்களிடம் ஒன்றுமட்டும் கேட்டறிய விரும்புகிறேன் நீங்கள் தூய ஆவியை எவ்வாறு பெற்றுக்கொண்டீர்கள்? திருச்சட்டம் சார்ந்த செயல்களாலா? அல்லது நற்செய்தியைக் கேட்டு நம்பிக்கை கொண்டதாலா?தூய ஆவியால் நீங்கள் தொடங்கிய வாழ்க்கையை இப்பொழுது வெறும் மனிதமுயற்சியால் நிறைவுசெய்யப் போகிறீர்களா? அந்த அளவுக்கு நீங்கள் அறிவிலிகளா?நீங்கள் பட்டறிந்த அனைத்தும் வீண்தானா? வீணாகத்தான் முடியுமா?உங்களுக்குத் தூய ஆவியை அளித்து உங்களிடயே வல்லசெயல்களை ஆற்றுபவர் எதை முன்னிட்டு அவ்வாறு செய்கிறார்? நீங்கள் சட்டம் சார்ந்த செயல்களைச் செய்வதாலா? அல்லது நற்செய்தியைக் கேட்டு நம்பிக்கை கொண்டதாலா?

**பதில்பாடல் :** இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றுவோம்

## நற்செய்தி : லூக்கா 11 : 5 - 13

அக்காலத்தில் இயேசு சீடர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினார்: “உங்களுள் ஒருவர் தம் நண்பரிடம் நள்ளிரவில் சென்று,“நண்பா, மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகக்கொடு. என்னுடைய நண்பர் ஒருவர் பயணம் செய்யும்வழியில் என்னிடம் வந்திருக்கிறார். அவருக்குக் கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை“ என்று சொல்வதாக வைத்துக் கொள்வோம். உள்ளே இருப்பவர், “ எனக்குத் தொல்லைகொடுக்காதே. ஏற்கெனவே கதவு பூட்டியாயிற்று. என் பிள்ளைகளும் என்னோடு படுத்திருக்கிறார்கள். நான் எழுந்திருந்து உனக்குத் தரமுடியாது“ என்பார். எனினும் அவர் விடாப்பிடியாய்க் கதவைத் தட்டிக்கொண்டேயிருந்தால் அவர் தம் நண்பர் என்பதற்காக எழுந்து கொடுக்காவிட்டாலும், அவரது தொல்லையின் பொருட்டாவது எழுந்து அவருக்குத் தேவையானதைக் கொடுப்பார் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். மேலும் நான் உங்களுக்குச் சொல்கிறேன்: கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள் தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில் கேட்போர் எல்லாரும் பெற்றுக்கொள்கின்றனர் தேடுவோர் கண்டடைகின்றனர் தட்டுவோருக்குத் திறக்கப்படும். பிள்ளை மீனைக் கேட்டால் உங்களுள் எந்தத் தந்தையாவது மீனுக்குப் பதிலாகப் பாம்பைக் கொடுப்பாரா? முட்டையைக் கேட்டால் அவர் தேளைக் கொடுப்பாரா?13 தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி!“ என்றார்.

**தியானம்:** இன்றைய வாசகம் கடவுளைப்பற்றிய ஒரு தவறான கண்ணோட்டத்தை நமக்குத் தந்துவிட வாய்ப்புண்டு. அதாவது கடவுள் கடினமான உள்ளத்தைக் கொண்டவராகவும் விடாப்பிடியாகத் தொடர்ந்து செபிப்பதன் மூலம் மட்டுமே அவருடைய மனதை மாற்றி நமக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது போலவும் புரிந்து கொள்ள வாய்ப்புண்டு. இது சரியான புரிதல் அல்ல. கடவுளைப்பற்றிய எதிர்மறையான பார்வை இது. செபம் என்பது கடவுளின் மனநிலையில் மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய ஒன்று அல்ல, மாறாக, செபிப்பவரின் மனநிலையில் மாற்றம் வர ஆரம்பிக்கிறது. எப்படி பெரும்பாலன நேரங்களில் நம்முடைய செபங்கள் சடங்காச்சார செபங்களாக வாயிலிருந்து மட்டும் வரும் செபங்களாய் இருக்கின்றன. ஆனால் தொடர்ந்து விடாப்பிடியாக போராடிச் செபிக்க ஆரம்பிக்கும் போது நம்முடைய மனநிலையில் மாற்றம் வர ஆரம்பிக்கிறது. எப்படி? நமது செபம் உள்ளத்திலிருந்து (ஆன்மாவிலிருந்து ) வர ஆரம்பிக்கிறது. .உள்ளத்திலிருந்து உயர்த்தப்படும் இத்தகைய செபமே உண்மையான செபம். இத்தகைய செபம் கடவுளின் அரியணையை வந்தடைகிறது. சுருக்கமாக சொல்லப்போனால் தொடர்ந்து போராடிச் செபிக்கும் செபம் கடவுளின் மனநிலையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை. மாறாக சரியான மனநிலையோடு செபிக்கும் மனநிலைக்கு நம்மை இட்டுச்செல்கிறது. நாம் சிந்தித்துப்பார்க்கக்கூடியது நம் செபம் நம்மை கடமை உணர்விலிருந்து வெளிவரும் செபமா? அல்லது ஈடுபாட்டோடு ஏறெடுக்கப்படும் செபமா? ஆகவே செபம் என்பது நம்மைச்சுற்றியுள்ள சூழலை மாற்றுவதல்ல மாறாக செபிக்கின்ற மனிதர்களை மாற்றுவது